# BSNLஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

*சுற்றறிக்கை எண்:90* *தேதி:-12.09.2011*

## தலை நகர் செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே!

### *NE12ஊதிய விகிதம்:-*

BSNL நிறுவனத்தின் மனித வள இயக்குநர் (Director HR) திரு. A.K.கர் அவர்களை நமது பொதுசெயலாளர் தோழர்.P.அபிமன்யு அவர்கள் 09.09.11 அன்று நேரில் சந்தித்து NE12 ஊதிய விகிதத்தை உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். தலைமையகத்தில் இந்த விஷயத்தில் தேவையற்ற கால தாமதம் செய்யப்படுவதை சுட்டிக்காட்டிய நமது பொது செயலாளர், இது தொடர்பாக தேசிய கவுன்சில் முடிவினையும் நினைவு கூர்ந்தார். இந்த பிரச்சனையில் வெகு விரைவில் தீர்வு காண்பதாக மனித வள இயக்குனர் உறுதி கூறியுள்ளார்.

### *இட ஒதுக்கீட்டின் மீது உச்சநீதி மன்ற தீர்ப்பு:-*

08.09.2011 அன்று இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீட்டின் மீது ஒரு தீர்ப்பை வழங்கி உள்ளது. வேலை மற்றும் பொருப்புகளில் எந்த ஒரு மாற்றமும் இன்றி அதே பதவியில் நீடிக்கும் சமயத்தில் அவர் உயர் ஊதிய விகிதம் மட்டும் பெறுகின்றார் என்றால், அது போன்ற இடங்களில் இட ஒதுக்கீடு பொருந்தாது என உத்தரவிட்டுள்ளது. உச்ச நீதி மன்ற நீதிபதிகள் திருவாளர்கள் R.V.ரவீந்திரன் மற்றும் மார்கண்டேய கட்ஜு ஆகிய நீதிபதிகள் அடங்கிய அமர்வு நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பு தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கு ஒரு பின்னடைவாகும்.

### *NEPP விளக்கத்தில் 01.10.2000க்கு பின் நிரந்தரம் பெற்றோருக்கு பாதிப்பு:-*

NEPPஐ பொருத்தவரை 01.10.2000க்கு பின் பணி நிரந்தரம் செய்யப்பட்ட TSMகளை BSNLல் பணி நியமனம் செய்யப்பட்டவராகவே கணக்கில் எடுக்கபட வேண்டும் என்ற விளக்கத்தை 08.09.2011 அன்று நிர்வாகம் வெளியிட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக DOT கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் இவ்வாறு விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆனால் நமது BSNL ஊழியர் சங்கத்தை பொருத்தவரை இது போன்றுள்ள 15,000 ஊழியர்களுக்கு BSNLல் இணைவதற்கான ஜனாதிபத்திய உத்தரவு (Presidential order) வழங்கப்பட்டுள்ளதால் இவர்கள் DOT ஊழியர்களாகவே கணக்கில் எடுக்கப்பட வேண்டும் என கேட்டுள்ளோம். BSNL நிர்வாகத்தின் இந்த தன்னிச்சையான முடிவினை நமது மத்திய சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த ஊழியர்களுக்கு நியாயத்தை பெற்றுத் தர வழி முறைகளை ஆராய்ந்து நிச்சயம் பெற்றுத் தரும்.

***கூட்டு நடவடிக்கை குழுவின் முடிவுகள்:-***

07.09.2011 அன்று புது டெல்லி தேசிய கவுன்சில் அலுவலகத்தில் தோழர் சுரேஷ் குமார் தலைமையில் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. விடுமுறையை காசாக்கும் திட்டத்தை வாபஸ் பெறுவது, இரண்டு ஆண்டு காலத்திற்கு LTCஐ நிறுத்தி வைப்பது, வெளி நோயாளி சிகிச்சைக்கு வவுச்சர் இல்லாமல் பணம் பெறுவதை கைவிடுவது உள்ளிட்ட ஊழியர் விரோத உத்தரவுகளை இந்த கூட்டம் வன்மையாக கண்டித்தது. இதற்கு எதிராக மாவட்ட/மாநில/அகில இந்திய அளவில் செப்டம்பர் 14ஆம் தேதி தர்ணா போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதே போல "ஓய்வூதிய நிதி ஒழுங்குபடுத்துவது மற்றும் மேம்படுத்தும் ஆணைய' மசோதாவை எதிர்த்து கோடிக்கனக்கான ஊழியர்கள் மற்றும் ஆதரவாளர்களின் கையெழுத்தை பெற்று பாரத பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடம் வழங்குவது, மற்றும் நவம்பர் 29 அன்று பாராளுமன்றத்தை நோக்கிய பேரணி நடத்துவது என பல்வேறு ஊழியர் சங்கங்களும், ஓய்வூதியர் நல அமைப்புகளும் சமீபத்தில் கூடிய தேசிய கருத்தரங்கத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் நோக்கிய பேரணி உள்ளிட்ட அதன் அனைத்து போராட்டங்களிலும் நாமும் கலந்துக் கொள்வது என கூட்டு நடவடிக்கைக் குழுவின் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,



***S.செல்லப்பா***
***மாநில செயலாளர்***